தொகுதி ௨
சித்திரம் ௬

பொன்னிவளநாட்டின்
வீர சரித்திரம்

# சுதந்திரம் வென்றது



www.ponnivala.com © 2012 Ponnivala Publishing

பகுதி-2 சித்திரம்-6

## சோழமன்னனின் அழிவு


சோழமன்னன், பொன்னிவள நாட்டு சகோதரர்களிடம் கப்பம் செலுத்துமாறு உத்தரவிட்டதை

நிறைவேற்ற, மூத்தவரான பொன்னர் கப்பத்துடன் சோழமன்னனின் அரண்மனைக்கு செல்கிறார். ஆனால் அங்கே அவர் சோழமன்னனால் சிறையிலடைக்கப்படுகிறார். இதை அறிந்த சங்கர் கடுங்கோபமடைந்தார்.












மறுவர்ணணை
பிரெண்டா பெக். இ
கசாண்ரா கொர்நால்

தமிழாக்கம்
சிவசங்கர் நவரட்ணம்
சத்தியபாமா

சித்திரங்கள்
ரவிசந்திரன & குழு

வடிவமைப்பு
பிரியா கோவிந்தராஜன்
ஸ்டெப்பான் ஹானிஹன்

ஒப்பச்சர்
முலர்விழி ராஜ்

வெளியீட்டாளர்
பொன்னிவளா
பப்ளிகேசன்


© 2012
சாப்ட்சைன்ஸ்
அசோசியேசன் லிமிடட்.


பொன்னிவள நாட்டு சகோதரர்கள் அவர்களுடைய பெற்றோர்களின் இறப்பிற்கு பின் எனக்கு வரியே கட்டவில்லை.
இப்போது அவர்களின் பங்காளிகளையும் சொந்த நாட்டை விட்டு அடித்து துரத்தி விட்டனர்.
இருக்கட்டும்! கப்பம் செலுத்த இங்கே வரும் போது அவர்கள் செய்த தவறுகளுக்கு நிச்சயம் தண்டிக்க வேண்டும்.




சோழமன்னர் பொன்னிவள நாட்டு சகோதரர்களை தண்டிக்கும் நோக்கத்துடன், அவர்களின் வரவுக்காக காத்திருந்தார்.
மன்னா! பொன்னிவள நாட்டில் இருந்து புறப்பட்ட மூத்த சகோதரன் நம் அரண்மனையை நெருங்கி வந்துவிட்டான்!
இவ்வளவு காலமும் கப்பம் செலுத்தாதிற்கு நீங்கள் அவனை தண்டிக்க வேண்டும்.
அவன் இங்கே வந்ததும் சிறையிலடைத்து தண்டிப்பேன்!


பொன்னர் தன் புரவியை மின்னல் வேகத்தில் செலுத்தி சோழநாடே அதிரும் வண்ணம் அரண்மனையின் நுழைவாயிலை வந்தடைந்தார்.
நான் சோழமன்னருக்கு கப்பம் செலுத்த வந்துள்ளேன்.
ம்....?! வருக! வருக! எங்கே உன் சகோதரன்?
மன்னா! உங்களுக்கு சேர வேண்டிய கப்பத்தை கொண்டு வந்துள்ளேன். ஏற்றுக்கொள்ளுங்கள்.
பொன்னர் தான் கொண்டு வந்திருந்த அனைத்தையும் சோழமன்னர் முன் மண்டியிட்டு மரியாதையுடன் வைத்தார்.


இவனை சிறையில் அடைத்து தண்டிக்க வேண்டும்!
பெற்றோர்கள் இறந்தபின் நீங்கள் ஏன் கப்பம் கட்டவில்லை?
மன்னியுங்கள் மன்னா! எங்களுக்கு அதைப் பற்றிய ஒரு தகவலும் தெரியாது.


தங்களிடம் இருந்து உத்தரவு வந்ததும் கப்பம் செலுத்த நான் உடனடியாக புறப்பட்டு விட்டேன்.
உங்களுக்கு பங்காளிகளை அடித்து துரத்த தெரியும். ஆனால்! மன்னருக்கு மரியாதை செய்ய வேண்டும் என்று தெரியாதா?
யாரங்கே! இவனை வண்டுகளும், எறும்புகளும் உள்ள சிறையில் அடையுங்கள். இவன் உடலை அவைகள் அரித்து சல்லடையாக்கட்டும்.
ஹா... ஹா... ஹா...


பொன்னரை காவலர்கள் இழுத்துச் சென்று சிறையில் அடைத்தனர்.
அறை முழுவதும் வண்டுகளும் எறும்புகளும் நிறைந்து காணப்பட்டன.
ஷ்ஷ்ஷ்....
ஷ்ஷ்ஷ்....
தங்காள்! ஒருவேளை நான் இறந்து விட்டால், என் இறுதிச்சடங்கை நீ தான் செய்ய வேண்டும்.
என் அருமை தங்கையே! நான் இனி உன்னை எப்போது பார்ப்பேன்?



விஷ்ணு பொன்னர் அழுது புலம்புவதைக் கேட்டு பூமிக்கு விரைந்து வந்தார்.
காஞ்சிநாதா! என்னைக் காப்பாற்றுங்கள்.
ஷ்ஷ்ஷ்...
ஷ்ஷ்ஷ்...
ஷ்ஷ்ஷ்...
கவலைப்படாதே பொன்னர்! நான் இருக்கிறேன்.


அதேசமயம் பொன்னிவள நாட்டில் ஊஞ்சலில் ஆடிக் கொண்டிருந்த தங்காள் கனவு காண்டாள்.
அக்கனவில், சிறை வைக்கப்பட்டிருக்கும் பொன்னரை அவள் தங்கரதத்தில் சென்று காப்பாற்றுவதாக காட்சிகள் தோன்றின.
பணிப்பெண்ணே!
என் அண்ணன் சங்கரை அழைத்து வா!
இதோ அழைத்து வருகிறேன் தாயே!


சங்கர் தாயம் விளையாடிக் கொண்டிருந்த இடத்திற்கு சென்ற பணிப்பெண்...
சாமி! தங்கை உங்களை உடனே அழைத்து வரும்படிச் சென்னார்.
என்ன தங்காள்! என்ன நடந்தது?
அண்ணா! நான் ஒரு கெட்ட கனவு கண்டேன்.
அக்கனவில் அண்ணன் சிறையில் அடைக்கப் பட்டிருப்பதை பார்த்தேன். ஒருவேளை.. சோழமன்னர் நம் அண்ணனை..
என்ன! அது எப்படி முடியும். சாம்புகன் தான் நம் அண்ணன் கூடவே இருக்கிறானே!
இல்லை! சாம்புகன் அரண்மனைக்கு வெளியே நிற்கிறான். அதனால், நீங்கள் சென்று நம் அண்ணனைக் காப்பாற்ற வேண்டும்.
சரி! நான் இப்பொழுதே செல்கிறேன்!


சங்கர் தன் குதிரையில் பாய்ந்து ஏறி சோழதேசம் நோக்கி புறப்பட்டார்.
வவ்வவ்...
வவ்வவ்...
ஆ..! என்ன நிலம் அதிர்கிறது!.. இது என்ன இவ்வளவு பயங்கரமான சத்தம்!
இது.! ஆ..! சங்கர் குதிரையில் வருகிறான்.
சங்கரின் குதிரை வரும் வேகத்தில் ஏற்பட்ட அனர்த்தங்களை கண்ட பங்காளிகள் உஷாரானார்கள்.
மன்னரிடம் உடனே சென்று சொல்ல வேண்டும்.

# சோழமன்னனின் அழிவு


அரண்மனையில் மன்னர் தன் மகனுக்கு வில் வித்தையைச் கற்றுக் கொடுத்துக் கொண்டு இருந்தார். அவ்விடம் சென்ற பங்காளிகள் செய்தியை தெரிவித்தனர்.
மன்னா! பொன்னிவள நாட்டு கோபக்கார இளைய சகோதரன் வந்து கொண்டிருக்கிறான்!
எங்களை அடித்து துரத்தியது அவன்தான்!
சோழமன்னர் சங்கரை பற்றி பங்காளிகள் கூறியதை கேட்டதும் பயந்து விட்டார். தான் பொன்னரை சிறையிலிட்டு கொடுமைப்படுத்தியது தெரிந்தால், தான் உயிருடன் இருக்க முடியாது என்பதால் ஒரு தந்திரமான திட்டத்தை போட்டார்.
நான் பொன்னருக்கு செய்த கொடுமைகள் சங்கருக்கு தெரிந்தால் என்னை நிச்சயம் கொன்று விடுவான்.
எனவே, சிறையில் இருக்கும் பொன்னரை அழைத்து வந்து, அவனுக்கு பரிசுகள் கொடுத்து சமாதானம் செய்யுங்கள்.
சரி! மன்னா!


காவலாளிகள் பொன்னரை சிறையிலிருந்து அழைத்துச் செல்ல வந்தனர்.
எழுந்து வா எங்களுடன்!
பொன்னர் எழுந்து காவலாளிகளை பின் தொடர்ந்து சென்றார்.


பொன்னா்! உன் இளைய சகோதரன் வந்து கொண்டிருக்கிறான்.
அவனிடம் நான் உன்னை சிறையில் அடைத்ததை பற்றி சொல்லாதே.
மாறாக நான் உன்னை நன்கு கவனித்துக் கொண்டதாகவும், பல பரிசுகள் கொடுத்ததாகவும் அவனிடம் கூறு.
உன் இளைய சகோதரனின் கோபத்தால் வீண் பிரச்சினைகள் ஏற்படாமல் இருக்கவே நான் இப்படி சொல்ல சொல்கிறேன்.


அவன் உண்மையை தெரிந்து கொண்டால் என்னை அழித்து விடுவான்.
ஒருவேளை நீ அவனிடம் உண்மையைச் சொன்னால், நான் உங்கள் மூவரையும் அழித்து விடுவேன்.
ஆ...!
சோழமன்னர் மிரட்டியதைக் கேட்ட பொன்னர் பயந்தார்.


விரைவில், சோழமன்னரின் அரண்மனை வாயிலுக்கு வந்த சங்கர் அங்கே நின்ற சாம்புகனை கோபத்துடன் பார்த்து.....
சாம்புகா! நீ இங்கே என்ன செய்கிறாய்?
உள்ளே என்ன நடக்கிறது என்று அறியாமல் நீ இங்கே வீணே நின்று கொண்டிருக்கிறாய். உள்ளே சோழமன்னன் என் அண்ணனை சிறையிலடைத்துள்ளார்!
சங்கர் சாம்புகனை வெளியில் நின்றதிற்காக கோபத்தோடு கடிந்து கொண்டார்.



அண்ணா! உங்களுக்கு ஒன்றும் இல்லையே?
இங்கே உங்களை சிறையிலடைத்து வைத்திருந்தார்கள் என எனக்கு தெரியும்.
நீ தவறாக புரிந்து கொண்டிருக்கிறாய். நான் உன் அண்ணனை நன்றாக கவனித்து கொண்டேன்.
உண்மை தான் சகோதரா!
சோழமன்னர் என்னை நன்றாக கவனித்து, பல பரிசுகளும் கொடுத்துள்ளார்.


நீ பொய் சொல்கிறாய் என்று எனக்குத் தெரியும். சரி வா நாம் ஊருக்கு புறப்படலாம்.
இருவரும் இங்கே விருந்துண்டு என்னை பெருமைபடுத்திச் செல்லுங்கள்.
சரி மன்னா! உங்கள் விருப்பப்படியே உணவருந்தி விட்டு செல்கிறோம்.
பணிப்பெண்னே!
விருந்துக்கான உணவுகளை சிறந்த முறையில் சீக்கிரம் தயார் செய்யுங்கள்!
சரி மன்னா!



சோழமன்னர் தன் சதித்திட்டத்தை அரங்கேற்றும் பொருட்டு....
பெண்ணே! விருந்து தயார் ஆனதும் சிறுபகுதியை தனியே எடுத்து அதில் கொடியவிஷத்தை கலந்து வந்துள்ள விருந்தாளிகளுக்கு பரிமாறு.
பணிப்பெண் மன்னரின் உத்தரவுப் படி, உணவில் விஷத்தைக் கலந்தாள்.
வாருங்கள்! உணவருந்தலாம்!



சோழ அரண்மனையில் நடப்பவைகளை விஷ்ணு மேலிருந்து பார்த்துக் கொண்டிருந்தார்.
விஷ்ணு பூனையாக உருமாறி, அவர்களுக்கு...
மியாவ்...
அளித்த உணவை தான் முதலில் உண்டார்.
உணவை உண்ட பூனை அக்கணமே இறந்து விழுந்தது.
சகோதரர்கள் தங்களுக்களிக்கப்பட்ட உணவில் விஷம் கலந்திருப்பதை அறிந்து உணவருந்தாமல் இலையை மூடிவிட்டு எழுந்தனர்.


அதேநேரம் சோழ மன்னர் மற்றொரு திட்டத்தையும் தயார் செய்தார். பெரிய குழியை தோண்டி அதில் கூர்மையான குச்சிகளை நட்டு வைக்கச் சொன்னார்.
இங்கே குழி ஒன்றை தோண்டுங்கள்.
சரி மன்னா!
பின் சேவகர்களைக் கொண்டு அக்குழி தெரியா வண்ணம் மூடி அதன் மேல் நாற்காலியை போட்டு வைத்து சகோதரர்கள் வந்து அதில் அமர்ந்ததும் அது உடைந்து கீழே விழுந்து இறந்து விடுவார்கள் என்று ஏற்பாடு செய்தார்.
ஆனால், துர்திஷ்டவசமாக மன்னரின் மகன் அதில் விளையாட்டாக உட்கார அது உடைந்து...
ஆ....
சடசடசடக்...
உள்ளே விழுந்த சிறுவன் இறந்து போனான்.


மகன் இறந்தும் சோழமன்னனின் பழிவாங்கும் குணம் அவரை விட்டு போகவில்லை. இறுதியாக ஒரு முயற்சியை மேற்கொண்டார்.
நில்லுங்கள்!
இல்லை! நாங்கள் புறப்படுகிறோம்.
நீங்கள் எங்களுடைய குலதெய்வத்தை வணங்கிவிட்டுச் செல்லுங்கள்.
சங்கர்! இந்த அரிய சந்தர்ப்பத்தை இழக்காமல் வணங்கி விட்டு செல்லலாம்.
சகோதரர்கள் சோழமன்னரின் குலதெய்வத்தை வணங்கி செல்ல ஒப்புக் கொண்டனர்.


சோழமன்னனின் குலதெய்வக் கோவில் மலையில் அமைந்திருந்தது. அதனால், பெரிய ஏணி ஒன்றை எடுத்து வந்தனர். ஏணியில் சங்கர் முதலில் ஏறினார்.
நீங்கள் இந்த மலையில் ஏறி பழக்கம் இல்லையாதலால் முதலில் இருவரும் ஏறுங்கள். நான் ஏணியை பிடித்துக் கொள்கிறேன். இறுதியாக நான் ஏறி வருகிறேன்.
முதலில் சங்கரும் அவரை பின் தொடர்ந்து பொன்னரும் ஏறிச் சென்றனர்.

இருவரும் மேலே ஏறிய பின்னரும் சோழமன்னன் ஏறாமல் தயங்கி நின்றான்.





அவர்கள் நகர்ந்ததும் சோழமன்னன் ஏணியை அகற்றும் படி உத்தரவிட்டார்.




சேவகர்கள் ஏணியை அங்கிருந்து எடுத்துச் சென்றனர். மலை மேல் மாட்டிக் கொண்ட பொன்னரும், சங்கரும் ஒருவரையெருவர் பழி கூறி சண்டையிட்டுக் கொண்டனர்.




மலை மேல் மாட்டிக் கொண்ட சகோதரர்களை காப்பாற்ற விரும்பிய விஷ்ணு பூமிக்கு வந்தார்.
உஸ்ஸ்ஸ்
அவர் நீண்ட தலைமுடி தாடியோடு துறவி போல் தன்னை உருமாற்றினார்.
சம்போ மகாதேவா!
கீழே இருந்து துறவியின் குரல் கேட்ட சகோதரர்கள் அவரை உதவிக்கு அழைத்தனர்.
பெரியவரே! எங்களுக்கு உதவி செய்வீர்களா?







விஷ்ணு தன் சக்தியால் தலைமுடியை நீளமாக கயிறு போல் வளரச் செய்தார்.






விஷ்ணு நீண்ட தலைமுடியை கயிறு போல் சுற்றி அவர்களை நோக்கி மேலே வீசினார்.







இருவரும் முடியைப் பிடித்து தொங்கியபடி கீழே வந்தார்கள்.





சகோதரர்கள் இருவரும் சோழமன்னனின் அரண்மனையை நோக்கி ஓடிச் சென்றனர். அப்போது அரண்மனை வாயிலில் நின்ற சாம்புகனையும் தங்களுடன் சேர்த்துக் கொண்டனர்.




சாம்புகன் குதிரைகளுக்கு காவலாக இருப்பதைப் பார்த்துவிட்டு....
சாம்புகா! என் அண்ணனின் வாளை எடுத்துக் கொண்டு வா! நாம் சோழமன்னருக்கு சரியான பாடம் புகட்ட வேண்டும்.
சங்கரும் சாம்புகனும் வாளை உருவிக் கொண்டு சோழ அரண்மனையை நோக்கி ஓடினர்!


சாம்புகனும் சங்கரும் அரண்மனையின் நுழைவாயிலில் நின்ற காவலாளிகளை தாக்கி அழித்துவிட்டு நுழைவாயிலின் பெரிய கதவுகளை உடைத்துக் கொண்டு உள்ளே சென்றனர்.
டமார்...
உள்ளே சென்ற அவர்கள் எதிர்பட்டவர்களையெல்லாம் கொன்றழித்து அரண்மனையை நாசம் செய்தனர்.
ஆ...ஆ!!!


பதினாறு யானையின் பலம் கொண்டவனான சாம்புகன் அனைவரையும் தூக்கி வீசி பந்தாடினான். அரண்மனைத் தூண்களையும் புடுங்கி எறிந்தான்.
ஓ!!!!!...
ஆ!!!!!!!..
ஐயோ....
ஹா..ஹா.. ஹா....
ஏய்...ஏய்....
கையில் கிடைத்தவர்களையெல்லாம் சாம்புகன் குழந்தையை போல் தூக்கி வீசினான். அதேநேரம் சங்கரும் பலபேரை வெட்டிச் சாய்த்தான்.
ஐயோ..!


ஹக்...!
ஓ...!
இறுதியாக சங்கர் அரியனையில் இருந்த சோழமன்னரிடம் சென்று, அவருடன் சண்டையிட்டு அவரை தன் வாளுக்கு இரையாக்கினான்.
ஆ...!
சங்கரின் வாளுக்கு பல பங்காளிகள் இரையாகினர். அதில் தப்பியவர்களை சாம்புகன் ராட்சதத் தூண்களைத் தூக்கிபோட்டு கொன்றான். அனைத்தையும் நாசம் செய்து விட்டு மூவரும் பொன்னிவள நாட்டை நோக்கிச் புறப்பட்டனர்.


சாம்புகா! குதிரைகளை கொட்டாரத்தில் கட்டிவிடு.
சகோதரர்கள் இருவரும் தங்கையை பார்க்கச் சென்றார்கள். சோழதேசத்தில் நிகழ்ந்தவற்றை அவளிடம் சொன்னால், கவலைப்படுவாள் என்று சொல்லாமல் மறைத்து விட்டார்கள்.
தங்காள்! சோழ மன்னருக்கு கப்பம் கட்டி விட்டு வந்து விட்டோம்.
வவ்வவ்...


சகோதரர்கள் வழக்கம் போல் தாயம் விளையாடத் தொடங்கினார்கள்.
நான் நினைத்ததை போட என்னால் முடியும்!
அதையும் வெல்ல என்னால் முடியும்!
மீண்டும் பிரச்சினைகள் அற்ற சாந்தமான சூழ்நிலை தோன்றியுள்ளது. இந்நிலை இப்படியே நீடிக்குமா? இல்லை பொன்னிவள நாட்டை ஆளும் குடும்பம் மீண்டும் கஷ்டங்களை சந்திக்கப்போகிறதா?

# பொன்னிவளாவை பற்றி ஒரு சிறு தொகுப்பு

பொன்னிவளா ஒரு புரதான பண்டை கால கதை. இக்கதை கிராமத்து உடுக்கை பாடகர்களால் இன்றும் ஆடலும், பாடலுமாக சொல்லப்படும் ஒரு பழங்கதையாகும்.

1965 வருடம் கொங்கு நாட்டில் உள்ள மின்வசதி இல்லாத சிறு கிராமத்தில், ஒலி நாடாவை கொண்டு, 18 இரவுகளில் ஒலி பதிவு செய்யப்பட்ட கதையாகும். முதன் முறையாக, கம்யூட்டர் 2D அனிமேஷனில் 26 தொலைக்காட்சி தொடர்களாக ஊருவாக்கப்பட்டு, பல மொழிகளில் பதிவு செய்யப்பட்டது.

ராஜாங்கம் என்பது அதன் மக்களால்தான் கட்டமைக்கப்படுகிறது. உதாரணமாக குடையுன் பரந்து விரிந்த மேல்பகுதி ராஜாங்கம் என்றால், மக்கள்தான் அதனை தாங்கி நிற்கும் கம்பிகள்.

எனவே ஒரு ராஜாங்கத்தைப்பற்றி சொல்லவேண்டும் என்றால், அந்த ராஜாங்கத்தின் மக்களை பற்றியும் சொல்லவேண்டும். அப்போதுதான் அந்த ராஜாங்கத்தைப்பற்றி முழுமையாக புரிந்து கொள்ள முடியும். இக்கதை கொங்கு மக்களின் கதை. இக்கதை தோராயமாக ஆறாம் நூற்றாண்டில் கொங்கு மக்களின் வாழ்க்கை முறையையும், அவர்களின் சமுதாய மற்றும் நாகரீக வாழ்க்கையையும் சித்தரிக்கிறது.



மேலும் பொன்னிவளாவைப்பற்றி விபரம் அறிய பொன்னிவள இணைய தளத்திற்கு செல்லுகள்
www.ponnivala.com/comic19tamil




வாருங்கள்!

# பொன்னிவள

அங்காடிக்கு

சித்திரக்கதை - HD அனிமேஷன் - விளையாட்டு - வாணிக பொருட்கள் - கேளிக்கை - மேலும் பல இலவசங்கள்!







01. காராளர் தோற்றம்
02. அநாதைச்சிறுவன்
03. நாடு கடத்தல்
04. உரிமையுள்ள காதலி
05. அதிசய கல்யாணம்
06. வருத்த விதை
07. ஆயிரம் யாசகர்கள்
08. கொடிய சாபம்
09. உத்தமியின் கோபம்
10. விரக்தியுன் பலன்
11. சாப நிவர்த்தி
12. சொர்க வாசல்
13. விதியின் கணக்கு
14. கோவில் ரகசியம்
15. உண்மை தெரிந்தது
16. நாடு திரும்புதல்
17. மானம் பெரிதென்று
18. சினம் கொண்ட சின்னவர்
19. சுதந்திரம் வென்றது
20. ஆசீர்வதிக்கப்பட்ட வாள்
21. சாம்புகனின் தந்திரம்
22. புதிய சவால்
23. நேருக்கு நேர்
24. எதிரியின் சவால்
25. பெரும் தியாகம்
26. ஒரு சகாப்தம் முடிந்தது

## 26யும் பெற்றுகொள்ள!

www.ponnivalamarket.com

மேலும் விபரங்களுக்கு இணைய தளத்திற்கு செல்க:

www.ponnivala.com


ISBN 978-1-927093-60-3



© 2012 Ponnivala Publishing